04) கீழே வணிகமொன்றின் உள்ளக, வெளியக ஆய்வுகளினூடாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட பெறுபேறுகள் சில பின்வருமாறு

A - வெளிநாட்டு ஊழியர்களை பணிக்கமர்த்த முடிதல்

B - நிறுவன முகாமைத்துவ கலாச்சாரம் சாதகமாக இல்லை

C - நிறுவன வளங்கள் வினைதிறனுடன் பயன்படுத்தப்படுகிறது

D - அரச வரவு செலவுத்திட்டத்தில் புதிய வரிகள் பல காணப்படுதல்

மேலுள்ள தகவல்களை "SWOT" பகுப்பாய்வு ஒழுங்கின் படி குறித்துக் காட்டும் சரியான விடைத்தொகுதியாக அமைவது

1) A, B, C, D 2) B, C, A, D 3) D, C, B, A

4) C, B, A, D 5) C, A, B, D (........)

05) அரசானது வணிகமுயற்சியாளர்களை ஊக்கப்படுத்துவதற்காகவும், கட்டுப்படுத்துவதற்காகவும் கீழ்வரும் பல்வேறுபட்ட செயற்பாடுகளை மெற்கொள்கின்றது.

A - கடன்வட்டி வீதங்களை மத்திய வங்கி மூலம் குறைத்தல்

B - தனியாரது வெளியீடுகளை கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தல்

C - வரி வீதங்களை குறைத்து அறவீடு செய்தல்

D - அரசாங்கம் தனியாரால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் ஈடுபடல்

E - வணிக ரீதியான சட்டங்களை உருவாக்குதல்

மேலுள்ள விடயங்களை கொள்ளை வகுப்பாளர், போட்டியாளர், ஊக்குவிப்பாளர், கட்டுப்பாட்டாளர், வாடிக்கையாளர் எனும் தலைப்புக்களின் கீழ் ஒழுங்குபடுத்தும் சரியான தொகுதி எது?

1) A, D, C, E, B 2) B, D, E, C, A 3) C, D, A, B, E

4) E, D, C, B, A 5) A, B, C, D, E (..........)

06) பின்வருவனவற்றுள் சரியான கூற்றினைத் தெரிவு செய்க.

1) ஒவ்வொரு தனி வியாபாரமும் 1918 ஆம் ஆண்டின் வியாபாரப் பெயர்ப்பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.
2) உத்தரவாதத்தால் வரையறுத்த கம்பனிகளின் அங்கத்தவர்களுக்கு பங்கிலாபம் வழங்கப்படுவதில்லை
3) பங்குடமைச் சட்டத்தின் பிரகாரம் பங்குடமையின் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக பங்காளர்கள் ஊதியத்தைப் பெறுவதற்கு உரிமையுடையவர்கள் ஆவர்.
4) இலங்கையில் காணப்படும் கூட்டுறவுச் சங்கங்கள் இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையினால் பதிவு செய்யப்படுகின்றன.
5) வணிக முறைக்கான அங்கீகார வணிகம் தொடர்பில் அங்கீகாரம் பெற்றவர் முழுமையான சுதந்திரமுடையவர் ஆவார். (..........)

07) வரையறுக்கப்பட்ட கம்பனிகள் சட்ட அந்தஸ்தினை (Legal personality) பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பமாக அமைவது

1) முன்விபரணத்தினை வெளியீடு செய்கையில்
2) அகவிதியை தயார் செய்கையில்
3) உருவாக்கற் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்கையில்
4) இழிவு கட்டணத்தினைப் பெற்றுக்கொள்கையில்
5) பங்குச் சந்தையில் பட்டியலிடுகையில் (..........)

08) பின்வருவன முயற்சியாண்மையுடன் தொடர்புடைய சில காரணிகள் ஆகும்.

A - ஆர்வம்

B - மனோநிலை

C - கற்பனையுடைய சிந்தனை

D - முன்மாதிரி

E - அனுபவம்

மேலே காட்டப்பட்டவற்றுள் முயற்சியாண்மை அபிவிருத்திக்குத் தடையாக உள்ள காரணி எது? அல்லது எவை?

1) A யும் C யும்  2) E மட்டும்  3) C யும் D யும் E யும்

4) A யும் B யும்  5) B மட்டும்  (..........)

09) சிறு வணிகங்களுக்கு ஆலோசனைச் சேவைகள் வழங்கும் நிறுவனங்களின் தொகுதி பின்வருவனவற்றுள் எது?

1) கைத்தொழில் அபிவிருத்திச் சபை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, இலங்கை தரக்கட்டளைகள் பணியகம், கைத்தொழில்நுட்ப நிறுவனம்.
2) தேசிய அபிவிருத்தி வங்கி, சிறு கைத்தொழில் அமைச்சு, முதலீட்டு ஊக்குவிப்பு வலயம், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
3) கைத்தொழில் அபிவிருத்திச் சபை, தேசிய அபிவிருத்தி வங்கி, முதலீட்டுச் சபை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
4) இலங்கை தரக்கட்டளைகள் பணியகம், கைத்தொழில்நுட்ப நிறுவனம், முதலீட்டுச் சபை, தேசிய அபிவிருத்தி வங்கி
5) தேசிய அபிவிருத்தி வங்கி, முதலீட்டுச் சபை, கைத்தொழில்நுட்ப நிறுவனம், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (..........)

10) பின்வரும் அட்டவணையானது பண வகைகளினையும் அவற்றிற்கான உதாரணங்களையும் காட்டுகின்றது.

| பண வகைகள் | உதாரணங்கள் |
|---|---|
| A - சட்டப்பணம் | 1. காசோலை |
| B - வங்கிப்பணம் | 2. பரிசுத்தின வவுச்சர் |
| C - அண்மிய பணம் | 3. வரவு அட்டை |
| D - இலத்திரனியல் பணம் | 4. யூரோ |
| E - கடன் பணம் | 5. குற்றி நாணயம் |
| F - வன் பணம் | 6. வணிகத்தாள் |

பணவகைகள், உதாரணங்கள் தொடர்பில் சரியான இணைப்பினைக் காட்டும் தொகுதி எது?

1) A - 1 / B - 3 / C - 5 / D - 6 / E - 4 / F - 2
2) A - 5 / B - 1 / C - 6 / D - 3 / E - 2 / F - 4
3) A - 6 / B - 2 / C - 4 / D - 1 / E - 5 / F - 3
4) A - 2 / B - 5 / C - 3 / D - 4 / E - 6 / F - 1
5) A - 4 / B - 6 / C - 1 / D - 2 / E - 3 / F - 5 (........)

11) காசோலை ஒன்று மறுக்கப்படுவதற்குரிய காரணங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் காசோலையை மீண்டும் வங்கிக்கு சமர்ப்பிக்க முடியாத நிலையை காட்டும் விடை எது?

1) நடைமுறைக் கணக்கில் போதிய நிலுவையின்மை
2) பூர்த்தி செய்யப்படாத நிலைமை
3) புறக்குறிப்பிடல் இன்மை
4) காலம் கடந்த காசோலை
5) திகதி குறிப்பிடப்படாமை (..........)

12) வங்கிக் கட்டிடமொன்றிற்கு பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக தீப்பிடித்திருந்தது. இதனால் வங்கியருகே நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் சிலவும் தீயினால் சேதமுற்றன. வாகனங்களுக்கு தீயபாயக் காப்புறுதி செய்யப்பட்டிருந்ததாயினும் காப்புறுதியினால் இழப்பீடு செலுத்த மறுக்கப்பட்டிருந்தது. இதனுடன் தொடர்புடைய தத்துவமாக கருதப்படக்கூடியது

1) உயர் நம்பிக்கைத் தத்துவம்
2) பங்களிப்புத் தத்துவம்
3) அண்மிய காரணித் தத்துவம்
4) காப்புறுத்தும் உரிமைத் தத்துவம்
5) பதிலாள் வைப்புத் தத்துவம் (..........)

13) யாழ்ப்பாணத்திலிருந்து உடனடி மரக்கறிகளை தம்புள்ள சந்தைக்கு நகர்த்துவதற்கான பொருத்தமான போக்குவரத்து ஊடகத் தெரிவில் செல்வாக்குச் செலுத்தும் விடயங்கள் யாவை?

1) பாதுகாப்பு / கிடைப்பனவுத் தன்மை / சக்தி / பாதை
2) கொள்ளளவு / கிடைப்பனவுத் தன்மை / பாதை / வேகம்
3) கிரயம் / பாதுகாப்பு / கொள்வனவு / சக்தி
4) பாதுகாப்பு / வேகம் / பாதை / கொள்ளளவு
5) கொள்வனவு / கிரயம் / பாதுகாப்பு / வேகம் (..........)

14) பின்வரும் அட்டவணையானது சர்வதேச வியாபாரத்தில் பயன்படுத்தும் ஆவணங்களையும், அவற்றினை வழங்குவதன் நோக்கங்களையும் எடுத்துக் காட்டுகிறது.

| ஆவணங்கள் | வழங்கும் நோக்கம் |
|---|---|
| A - நாணயக் கடிதம் | 1. பொருளின் உரிமையினை உறுதிப்படுத்த |
| B - தோற்றுவாய்ச் சான்றிதழ் | 2. நுகர்வுத் தகமையினை உறுதிப்படுத்த |
| C - நட்டஈட்டுக் கடிதம் | 3. பணக்கொடுப்பனவை உறுதிப்படுத்த |
| D - சுமைச்சீட்டு | 4. பொருளின் மதிப்பினை உயர்த்துவதற்கு |
| E - சுகநலசான்று | 5. தூய சுமைச் சீட்டினை பெறுவதற்கு |

ஆவணங்கள் வழங்கும் நோக்கம் தொடர்பில் சரியான இணைப்பினைக் கொண்ட தொகுதியாக இருப்பது எது?

1) A - 4 / B - 1 / C - 2 / D - 5 / E - 3
2) A - 3 / B - 4 / C - 5 / D - 1 / E - 2
3) A - 2 / B - 3 / C - 4 / D - 5 / E - 1
4) A - 1 / B - 2 / C - 3 / D - 4 / E - 5
5) A - 5 / B - 4 / C - 1 / D - 3 / E - 2 (........)

15) உலக சனத்தொகையின் அடிப்படையில் மிகப்பெரிய வர்த்தக கூட்டாக கருதப்படக்கூடியது பின்வருவனவற்றுள் எது?

1) தெற்காசிய வலய வர்த்தக ஒப்பந்தம் (SAARC)
2) ஐரோப்பிய சங்கம் (EU)
3) தென்கிழக்காசிய நாடுகளுக்கான சங்கம் (ASEAN)
4) வடஅமெரிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (NAFTA)
5) மத்திய ஐரோப்பிய சுதந்திர வியாபார உடன்படிக்கை (CEFTA) (..........)

16) “ஹென்றி மின்ஸ்பேக்” என்பவரது கருத்தின் படி ஒரு முகாமையாளரின் தீர்மானம் சார் கடமைப்பங்கு என கருதமுடியாதது எது?

1) ஊழியர் தொடர்பான பிணக்குகளில் நடுநிலை காத்தல்
2) வருடாந்த வரவு செலவுத்திட்டப் பகிர்ந்தளிப்பு
3) போட்டியாளரது எதிர்நடவடிக்கைகளை கையாளுதல்
4) தரம் தொடர்பான முகாமை மட்ட கலந்துரையாடல்கள்
5) புதிய செயற்திட்டங்களை நிறுவனத்தில் அறிமுகப்படுத்தல் (..........)

17) பின்வரும் அட்டவணையில் X நிரலானது ஒழுங்கமைத்தலுடன் தொடர்புடைய முக்கிய அம்சங்களையும், Y நிரலானது அவ் அம்சங்களுக்கான வரைவிலக்கணங்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A - திணைக்களப்படுத்தல் | 1. மேல்மட்ட முகாமையிலிருந்து கீழ்மட்ட முகாமைக்கு அதிகாரம் பாய்ந்து செல்லும்முறை |
| B - மையப்படுத்தல் | 2. பொதுவான தன்மையின் அடிப்படையில் தொழில்களை தொகுதிகளாக்குதல் |
| C - கட்டளைச் சங்கிலி | 3. தீர்மானம் எடுக்கும் அதிகாரம் உயர்மட்ட முகாமையிடம் கையளிக்கப்பட்டிருத்தல் |
| D - கட்டுப்பாட்டு விசாலம் | 4. ஒரு முகாமையாளருக்கு நேரடியாக அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய கீழுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை |

1) A - 1 / B - 3 / C - 4 / D - 2
2) A - 3 / B - 1 / C - 2 / D - 4
3) A - 4 / B - 2 / C - 3 / D - 1
4) A - 2 / B - 3 / C - 1 / D - 4
5) A - 2 / B - 3 / C - 4 / D - 1 (........)

18) பின்வருவன திட்டமிடல் மற்றும் கட்டுப்படுத்தல் கருமங்களின் படிமுறைகள் ஆகும்.

A - இலக்குகளையும் நோக்கங்களையும் உருவாக்குதல்
B - செயற்பாடுகளை நியமத்துடன் ஒப்பிடல்
C - விலகல் இருப்பின் சீராக்குதல்
D - இலக்குகள் நோக்கங்கள் அடைவதற்குரிய வழிமுறைகளை இனங்காணல்
E - உண்மையான செயற்பாடுகளை மதிப்பிடல்
F - நியமங்களை உருவாக்குதல்
G - வழிமுறைகளை எழுத்து வடிவில் சமர்ப்பித்தல்

மேற்கூறப்பட்ட கட்டுப்படுத்தல் செயன்முறைக் கருமங்களை சரியாக கொண்ட தொகுதி

1) A → D → G → F
2) D → E → B → C
3) F → E → B → C
4) E → B → C → G
5) A → C → D → G (..........)

19) பின்வருவனவற்றுள் வேலை உற்பத்தியுடன் (Job Production) தொடர்புபடாத பண்பு என கருதக்கூடியது

1) கட்டளைக்கு ஏற்ப உற்பத்தி நடைபெறுதல்
2) கிரயங்கள் குறைவடைந்து அலகு விலை குறைவடைதல்
3) கூடுதலாக உழைப்புச் செறிவுமுறை பயன்படுத்தப்படும்
4) உற்பத்தி திட்டமிடலும் கட்டுப்படுத்தலும் பொருளுக்கு பொருள் மாறுபடுதல்
5) சந்தை நட்ட அச்சம் குறைவாக அல்லது இல்லாது இருத்தல் (..........)

20) ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்கள் அடையப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு உற்பத்திகளினை தொடர்ச்சியாக பரிசோதனை செய்தல் தரக்கட்டுப்பாடாகும். பின்வருவன வற்றுள் தரக்கட்டுப்பாட்டு நுட்பமுறைகளினை கொண்ட தொகுதியினை தெரிவு செய்க.

1) தரவட்டம், தர உறுதி, தர நியமம், சரக்குமட்டமுறை
2) தொக்கட்டைமுறை, சரக்குமட்டமுறை, பூச்சியவழு, ABC பகுப்பாய்வு
3) தர உறுதி, கணனி செயற்திட்டமுறை, சரக்கு பேரேட்டுமுறை, மொத்ததர முகாமை
4) பூச்சியவழு, புள்ளிவிபர கட்டுப்பாடு, தரவட்டம், மொத்த தர முகாமை
5) இரட்டைப் பாத்திரமுறை, ABC பகுப்பாய்வு, சரக்குமட்டமுறை, கணனி செயற்திட்டமுறை

(..........)

21) பின்வரும் அட்டவணையில் X நிரலானது உற்பத்திப் பொருள் வாழ்க்கை வட்டத்திற்கான கட்டங்களையும் Y நிரலானது அக்கட்டங்களில் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளையும் காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A - அறிமுகம் | 1. உற்பத்திக் கலவையில் மாற்றம் செய்தல் |
| B - வளர்ச்சி | 2. மாதிரிகளை வழங்குதலும் விளம்பரங்களை அதிகரித்தலும் |
| C - முதிர்ச்சி | 3. முதலீட்டிற்கான மாற்று வழியினை தேடுதல் |
| D - வீழ்ச்சி | 4. புதிய பண்புகளினை பொருளில் அறிமுகம் செய்தல் |

X மற்றும் Y ஆகியவற்றுக்கான மிகப் பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.

1) A - 1 / B - 4 / C - 3 / D - 2
2) A - 2 / B - 4 / C - 1 / D - 3
3) A - 3 / B - 1 / C - 2 / D - 4
4) A - 4 / B - 2 / C - 1 / D - 3
5) A - 4 / B - 1 / C - 2 / D - 3 (........)

22) பின்வரும் அட்டவணையில் X பணச்சந்தையின் உபசந்தைகளையும், Y நிரலானது அச்சந்தையின் தேவைப்பாடுகளையும் எடுத்துக் காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A - வங்கிகளுக்கிடையிலான அழைப்புக் கடன் சந்தை | 1. வணிக வங்கிகளின் வெளிநாட்டு பணக் கொடுக்கல் வாங்கல்கள் |
| B - திறைசேரி உண்டியல் சந்தை | 2. இலங்கையில் வதியும் வெளிநாட்டவர்களுக் கானது |
| C - உள்நாட்டு அந்நிய செலவணிச் சந்தை | 3. வங்கிகளின் குறுங்கால நிதி நெருக்கடிகளுக் கானது |
| D - கரை கடந்த வங்கிச் சந்தை | 4. வரையறுத்த பொதுக் கம்பனிகளின் குறுங்கால நிதி நெருக்கடிகளுக்கானது |
| E - வணிகப் பத்திரச் சந்தை | 5. அரசினது குறுங்கால நிதி நெருக்கடிகளுக்கானது |

X மற்றும் Y என்பவற்றிற்கிடையிலான பொருத்தமான இணைப்பினைத் தெரிவு செய்க.

1) A - 4 / B - 3 / C - 2 / D - 1 / E - 5
2) A - 5 / B - 1 / C - 4 / D - 2 / E - 3
3) A - 2 / B - 4 / C - 3 / D - 5 / E - 1
4) A - 1 / B - 2 / C - 5 / D - 4 / E - 3
5) A - 3 / B - 5 / C - 1 / D - 2 / E - 4 (.......)

e-thaksalawa – The National e-learning Portal for The General Education

23) வரையறுத்த பொதுக்கம்பனிகள் பங்கிலாபமாக பங்குதாரர்களுக்கு பணத்தினை வழங்குதல் நிதி வெளியேற்றத்தினைக் கொண்டு வருமாதலால், இதனைத் தவிர்ப்பதற்கான இலவச பங்குவழங்கல் நடவடிக்கை அழைக்கப்படுவது

1) ஒதுக்கங்களை மூலதனமாக்கல்
2) உரித்து வழங்கல்
3) தன்னியக்க வியாபாரமுறை
4) ஒப்ப பணத்திற்கான கொடை முனைவு
5) அகநிதி மூலம் (..........)

24) தொழில் எதிர்பார்ப்பாளர்களின் பட்டியல் ஒன்றை தயாரித்து முடிப்பதுடன் தொடர்புடைய மனிதவள முகாமைத்துவ தொழிற்பாடு எது?

1) ஆட்சேர்ப்பு
2) தெரிவு செய்தல்
3) தொழில் விபரணம் செய்தல்
4) செயற்திறன் மதிப்பீடு
5) இணைத்தல் (..........)

25) மனிதவள முகாமைத்துவ கருமங்களாகிய ஆட்சேர்த்தலும், தெரிவு செய்தலும் ஆகிய செயற்பாடுகள் ஆரம்பிக்கும், முடிவடையும் கருமங்களை சரியாக கொண்ட தொகுதி

1) மனிதவள திட்டமிடலும், மருத்துவ பரிசோதனையும்
2) தொழில் விளக்கமும், விண்ணப்பப்பத்திர மதிப்பீடும்
3) தொழில் உருவாக்கமும், நியமனக் கடிதம் வழங்குதலும்
4) தொழில் அறிமுக விளக்கமும், தொழில் உறவும்
5) இணைத்துக் கொள்ளலும், செயற்திறன் மதிப்பீடும் (..........)

26) பயிற்சி, அபிவிருத்தி தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் பொருத்தமற்ற கூற்றினைத் தெரிவு செய்க.

1) பயிற்சி நாளாந்த செயற்பாடுகளுடனும், அபிவிருத்தி எதிர்கால செயற்பாடுகளுடனும் தொடர்புடையது.
2) பயிற்சி செலவு குறைந்த குறுங்கால செயற்திட்டம், அபிவிருத்தி செலவு கூடிய நீண்டகால செயற்திட்டம்.
3) பயிற்சி தனிப்பட்ட ஊழியர்களை நோக்காக கொண்டது, அபிவிருத்தி நிறுவனத்தினை நோக்காக கொண்டது.
4) பயிற்சி எண்ணக் கருத்திறனை விருத்தி செய்கையில், அபிவிருத்தி தொழில்நுட்பத் திறனை விருத்தி செய்கின்றது.
5) பயிற்சி புறத்தூண்டல் நடவடிக்கையாகும், அபிவிருத்தி அகத்தூண்டல் நடவடிக்கையாகும் (..........)

27) தகவல் முறைமையின் கருமங்களையும், கருவிகளையும் கட்டுப்படுத்துவதற்காக உருவாக்கப் பட்டுள்ள நியமங்கள், சட்டதிட்டங்கள், கொள்கைகள் என்பன இலத்திரனியல் தகவல் முறைமையின் எக்கூறாக கருதப்படும்

1) வன்பாகம்
2) மென்பாகம்
3) உயிரியல் பாகம்
4) தரவு
5) செயற்பாட்டுமுறை (..........)

28) நிறுவனங்களில் உயர்மட்ட பணிப்பாளர்களினால் எதிர்கால போக்குகள் தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்காக பயன்படுத்தப்படும் தகவல் முறைமை பின்வருவனவற்றுள் எது?

1) முகாமைத்துவ தகவல் முறைமை
2) நிறைவேற்று உதவி முறைமை
3) தீர்மான உதவி முறைமை
4) அறிவுப் பணி முறைமை
5) கொடுக்கல் வாங்கல் செயன்முறைப்படுத்தல் முறைமை (..........)

29) வணிகமொன்று தன்னால் வகுக்கப்பட்ட இலட்சிய நோக்கக்கூற்றினை (Mission Statement) வணிகத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள விரும்புகின்றது. வணிகத் திட்டத்தில் சேர்ப்பதற்கான மிகப்பொருத்தமான பிரிவாக கருதப்படக்கூடியது

1) நிறைவேற்றுச் சுருக்கம்
2) வணிக விபரணம்
3) செயற்பாட்டுத் திட்டம்
4) மனிதவளத் திட்டம்
5) மேலதிக தகவல்கள் (..........)

30) தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் வணிகமொன்றுடன் இணைந்து முதலிட விரும்பும் எதிர்கால முதலீட்டாளர் ஒருவர் குறித்த நிறுவனத்தின் சமப்பாட்டுப் புள்ளியினை அறிய விரும்புகின்றார். இத்தகவலை உறுதி செய்வதற்காக வணிகத்திட்டத்தில் எப்பகுதி அவருக்கு உதவியாக இருக்கும்?

1) வணிக விபரணம்
2) சந்தைப்படுத்தல் திட்டம்
3) செயற்பாட்டுத் திட்டம்
4) நிதித்திட்டம்
5) நிறைவேற்றுகைச் சுருக்கம் (..........)

❖ **31 - 40 வரையான வினாக்களுக்கு விடையளிப்பதற்காகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.**

31) அ) வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கடற்தொழில் என்பன .................................................................... பிரிவுகளாக கருதப்படும்.

ஆ) சுரங்கத் தொழில், தயாரிப்புத் தொழில், மின்வலு, கட்டிடவாக்கம் என்பன ........................................................................................................... பிரிவுகளாக கருதப்படும்.

32) அ) பிரபல்யமான வணிக நிறுவனம் ஒன்று சமுதாய நலனில் அக்கறை செலுத்துவது ............................................................................................................... என அழைக்கப்படும்.

ஆ) வணிகத்தை இனம் காட்டுவதும், அதன் பண்பாட்டு விழுமியங்களை காலம் காலமாக நிறுவனத்தினுள் கைமாற்றப்படுவதுமான அகச்சூழல் காரணி ............................................................ என்பதாகும்.

33) அ) அரசானது, கீழ்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு தனியார் துறையினருக்கும் அனுமதியினை வழங்கியுள்ளது. அத்தகைய ஒப்பந்த முறைகளில் "BOO" என்ற சுருக்கப் பெயரினால் குறிப்பிடப்பவது ......................................................... ஆவதுடன் "BOT" என்ற சுருக்கப் பெயரினால் குறிப்பிடப்பவது ........................................................ ஆகவும் கருதப்படும்.

ஆ) முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்கென சிறு வணிகர்களுக்கு அரசினால் வழங்கும் நிதிசார் ஊக்குவிப்புக்களாக 1) ...................................................... 2) .................................................... 3) ........................................... 4) ............................................... ஆகியவற்றை குறிப்பிட முடியும்.

34) அ) எல்லோராலும் எல்லோருக்குமாக அவர்களில் எவராவது வியாபாரத்தை நடாத்துவதற்கு உடன்பட்ட சிலருக்கிடையிலான உறவு ........................................................ என அழைக்கப்படும்.

ஆ) மக்களின் கூட்டிணைப்பு என்பதுடன், உரிமையாளரிடம் இருந்து வேறுபட்டதாக தனிமனித அந்தஸ்துடன் உயிர்வாழ்கின்ற அமைப்பு .................................................. என அழைக்கப்படும்.

35) அ) ............................................ இல்லாமல் கட்டுப்பாட்டுச் செயன்முறையானது தொழிற்படமாட்டாது.

ஆ) எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திற்குச் சாதனைகளை அடைத்துள்ளார்களா என எதிர்பார்க்கும் செய்முறை ................................................................................................................................. ஆகும்.

36) அ) மறுகட்டளை மட்டம் = ............................................................................ × உச்சக்கட்டளைக் காலம்

ஆ) ............................................................................................................ $= \frac{\text{வெளியீடு}}{\text{ஊழியர்களின் எண்ணிக்கை}}$

37) அ) இரண்டாம் தர பங்குச் சந்தையுடன் தொடர்புபடும் ஊகவியாபாரிகள் 1) .................................... 2) .......................................... என்போராவர்.

ஆ) தற்போது கொழும்பு பங்குச் சந்தையில் உரிமை மற்றும் கடன் பிணையங்கள் பரிமாற்றம் செய்யப்படும் முறை ................................................................................ என அழைக்கப்படும்.

38) அ) பொருத்தமான ஊழியரைப் பெற்றுக் கொள்வதற்காக பெருமளவு விண்ணப்பதாரிகளை தூண்டுதல் .................................................................................................. நடவடிக்கை எனவும், வந்து சேர்ந்த விண்ணப்பங்களில் இருந்து மிகப் பொருத்தமானவர்களை இனம்காணல் ................................................................................ எனவும் அழைக்கப்படும்.

ஆ) செயற்திறன் மதிப்பீட்டின் இரு நோக்கங்கள்

1) ............................................................ 2) ............................................................ என்பனவாகும்.

39) அ) தரவுகளை மாற்றல் செய்முறைகளுக்குட்படுத்துவதற்காக கணனியில் பயன்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களை ........................................................................... என்பது குறித்து நிற்கும்.

ஆ) இன்றைய நிறுவனங்களில் "தகவல்" ஒரு வளமாகும். இதன்படி தகவல் பரிமாற்றங்களான மின்னஞ்சல் (E-mail) தொலைநகல் (Fax), பல்லூடக சமர்ப்பிப்பு (Multimedia Presentation) என்பவற்றுடன் தொடர்புடைய தகவல் முறைமை மட்டம் ................................................................ என்பதாகும்.

40) அ) வணிகத் திட்டம் ............................................................................................ ஐக் கவர்வதற்காக ஒரு நியாயமான ஆவணமாக பயன்படுத்த முடியும்.

ஆ) இன்று மிகப் பரவலாக பயன்படுத்தப்படுவதும் பெருமளவு தகவல்களை சேமிக்கவும், மீளப் பயன்படுத்தவும், இலகுவாக கொண்டு செல்ல வசதியானதுமான வன் பொருள் ................................................................................................................ என அழைக்கப்படும்.

❖ **41 தொடக்கம் 50 வரையிலுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளை எழுதுக.**

41) வணிகங்கள் தத்தமது ஒழுக்கக் கோவை (Code of ethics) களின் மூலம் பாதுகாக்க முற்படும் நான்கு பகுதியினரைப் பெயரிடுக.

1) .................................................................... 2) ....................................................................

3) .................................................................... 4) ....................................................................

42) பங்குடமையொன்றின் வாழ்விற்கு இன்றியமையாத நிபந்தனைகள் நான்கினை குறிப்பிடுக.

1) ..............................................................................................................

2) ..............................................................................................................

3) ..............................................................................................................

4) ..............................................................................................................

43) அ) ஒரே வகையான வணிகத்தில் ஈடுபட்டிருக்கின்ற இரண்டு அல்லது மேற்பட்ட வணிக நிறுவனங்கள் ஒன்றாக இணைவது எவ்வாறு அழைக்கப்படும்?

..............................................................................................................

ஆ) அங்கீகார வணிகங்களின் பிரதான மூன்று வகைகளும் எவை?

1) ..............................................................................................................

2) ..............................................................................................................

3) ..............................................................................................................

44) அ) குறிப்பிட்ட திகதிக்கு முன் வங்கியில் பணப் பொறுப்பனவுக்காக சமர்ப்பித்தலைத் தடுக்கும் நோக்குடன் கட்டளையிடுவோனால் பிறப்பிக்கப்படும் காசோலை எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?

..............................................................................................................

ஆ) இலத்திரனியல் வங்கிச் சேவையைச் செயற்படுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய எவையேனும் இரண்டு வங்கி நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

1) ..............................................................................................................

2) ..............................................................................................................

45) தீர்மானம் எடுத்தலின் தர்க்க ரீதியான செயன்முறையின் படிமுறைகளை ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.

1) ..............................................................................................................

2) ..............................................................................................................

3) ..............................................................................................................

4) ..............................................................................................................

5) ..............................................................................................................

46) இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் பிணையங்களினது பரிமாற்றங்களினை முறைமைப்படுத்தலுக்கென அனுமதிக்கப்பட்டுள்ள சந்தை இடையீட்டாளர்களாக தொழிற்படும் ஐந்து தரப்பினரைக் குறிப்பிடுக.

1) ..............................................................................................................

2) ..............................................................................................................

3) ..............................................................................................................

4) ..............................................................................................................

5) ..............................................................................................................

47) அ) ஆட்சேர்ப்புக்கான விளம்பரங்களை தயாரிக்குகையில் நிறுவனங்களினால்

1) ..............................................................................................................

2) ..............................................................................................................

என்பன கருத்தில் எடுக்கப்படுவதுண்டு.

ஆ) மனிதவள முகாமைத்துவக் கருமங்களினை மதிப்பீடு செய்வதற்கு பயன்படுத்தக்கூடிய நியதிகள் நான்கினைக் குறிப்பிடுக.

1) ..........................................................................................................................

2) ..........................................................................................................................

3) ..........................................................................................................................

4) ..........................................................................................................................

48) அ) தொழிற்சங்கங்களினால் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக முன்னெடுக்கும் போராட்ட வடிவங்களின் நான்கு வகைகளைக் குறிப்பிடுக.

1) ..........................................................................................................................

2) ..........................................................................................................................

3) ..........................................................................................................................

4) ..........................................................................................................................

ஆ) கைத்தொழில் பிணக்குகளினை தீர்த்து வைக்கும் நான்கு முறைகளினைக் குறிப்பிடுக.

1) ..........................................................................................................................

2) ..........................................................................................................................

3) ..........................................................................................................................

4) ..........................................................................................................................

49) தரவுகளுக்கும், தகவல்களுக்கும் இடையிலான வேறுபாட்டினை தரப்பட்ட மூலங்களின் அடிப்படையில் வேறுபடுத்திக் காட்டுக.

| மூலம் | தரவு | தகவல் |
|---|---|---|
| 1) ஒழுங்கமைத்தல் செயற்பாடு | ............................................ | ............................................ |
| 2) தீர்மான பயன்பாடு | ............................................ | ............................................ |
| 3) பெறுமதி | ............................................ | ............................................ |
| 4) மாதிரி வடிவம் | ............................................ | ............................................ |

50) சந்தைப்படுத்தல் திட்டமொன்றில் முன்வைக்கப்படுபவற்றுள் போட்டியாளர்களின் சந்தைப்படுத்தல் உபாயமுறை முக்கியமானதாகும். இவ் உபாய வழிமுறையின் நான்கு தகவல்களும் யாவை?

1) ..........................................................................................................................

2) ..........................................................................................................................

3) ..........................................................................................................................

4) ..........................................................................................................................